
ரேவதி
புரொடக்ஷன்ஸ்

ரேவதி ப்ரொடக்ஷன்ஸ் அளிக்கும்

"மேதாவிகள்"

நடிகர்கள்

T. R. ராமச்சந்திரன்	...	ஜூனியர் நாதன்
K. A. தங்கவேலு	...	சீனியர் நாதன்
N. N. கண்ணப்பா	...	பிரபாகரன்
T. N. சிவதாணு	...	ஹோட்டல் மானேஜர்
T. K. பாலச்சந்திரன்	...	ஷ்யாம்
T. K. சம்பங்கி	...	இன்ஸ்பெக்டர்
மாணிக்கம்	...	கான்ஸ்டேபிள்

மற்றும் பலர்

நடிகைகள்

P. K. சரஸ்வதி	...	புல்-புல், மாதுரி
M. N. ராஜம்	...	மனோரமா
S. D. சுப்புலக்ஷ்மி	...	அத்தை
T. K. பட்டம்மாள்	...	முத்தம்மா

மற்றும் பலர்

" மேதாவிகள் "

" திரைக்குப்பின் "

கதை, வசனம்	...	பட்டு
பாடல்கள்	...	அம்பிகாபதி C. S. V. ராஜு
ஒளிப்பதிவு	...	W. F. கான்
உதவி	...	M. கர்ணன் S. பார்த்தசாரதி K. நாகேந்திர சாய்
ஸ்டில்ஸ்	...	B. வெங்கடேஸ்வர ராவ்
சங்கீதம்	...	G. R. நாயுடு
வாத்தியகோஷ்டி	...	ப்ரீ இந்தியா ஆர்ச்செஸ்ட்ரா
பாடல்கள் ஒலிப்பதிவு	...	T. S. ரங்கசாமி
உதவி	...	R. கணணன்
ஒலிப்பதிவு	....	ஏபல் ஜீவா
உதவி	...	D. சிவானந்தம் T. S. பார்த்தசாரதி
பின்னணி	...	M. L. வசந்தகுமாரி ஜிக்கி
டான்ஸ்	...	R. கிருஷ்ணராஜ்
மேக்கப்	...	ஸ்வர்ணப்பா
உதவி	...	பாபு
ஹேர் ஸ்டைல்	....	ரேபாராய்
உடை அலங்காரம்	...	K. P. நாயர்
எடிட்டிங்	...	V. S. ராஜன்
உதவி	...	V. ராஜாமணி
ப்ரோஸஸிங்	...	மாடர்ன் சினி லேபரட்டரி தமிழ்நாடு டாக்கீஸ்
உதவி டைரக்‌ஷன்	...	பட்டு, J. G. ரத்தினம்

ஸ்டூடியோ

ரேவதி

டைரக்‌ஷன்

K. வேம்பு

" மேதாவிகள் "

கதைச் சுருக்கம்

சிலர் பிறவியிலேயே மேதாவிகளாகப் பிறக்கிறார்கள்.

சிலர் சந்தர்ப்பத்தால் மேதாவிகளாகிறார்கள்.

சிலருக்கு அதிருஷ்டவசத்தால் மேதாவிகள் என்ற பட்டம் அவர்களை வந்தடைகிறது.

இவைகளில் எந்த வகையைச் சேர்ந்தவர்கள் நாதன் சகோதரர்கள்?

மேலே படியுங்கள்:

நாதனும் நாதனும் (சகோதரர்கள்) தங்களை பிரசித்தி பெற்ற துப்பறிபவர்களாக எண்ணிக்கொண்டு துப்பறியும் காரியாலயம் ஒன்று தொடங்குகிறார்கள். மனோரமா என்ற மான்விழியாளின் அத்தை கமலம்மாளுடைய வைரமாலை காணமற் போய்விடுகிறது. அத்துடன் புதையல் இருக்குமிடம் வரையப்பட்ட படம் ஒன்றும் காணமற் போய்விடுகிறது. அதனால் மனோரமாவுக்கும் ஷியாம என்ற இளைஞனுக்கும் நடக்கவிருந்த திருமணம் தடைப்படுகிறது. மனோரமா வைரமாலையைக் கண்டுபிடிக்க துப்பறிபவர்களின் உதவியைப் பெற நாதன் சகோதரர்களை அழைத்து வருகிறாள்.

அத்தையின் வீட்டில் பேய் உலர்வுவதாக அறிகிறார்கள் நாதன சகோதரர்கள். அதை ஊர்ஜிதப்படுத்துவது போல் வேலைக்காரி முத்தம்மாள் அன்றிரவே கொல்லப்படுகிறாள். பயத்தோடு நாதனும் நாதனும் நகையைத் தேடும்போது பேய் என்று கருதப்படுகிற ஓர் சறுப்பு உருவம் அவர்களைத் துன்புறுத்தி விரட்ட முயலுகையில் நகை துப்பறிபவர்களிடம் கிடைக்கிறது. கமலம்மாள் பிரமிக்கும்படி நகையை அவளிடம் கொடுக்கத் தீர்மானித்து

மறுநாள் நகை கிடைத்துவிடுமென்று கூறிச் செல்லு கிறார்கள்.

ஒரு கொள்ளைக்கூட்டத் தலைவன் நகையைப் பற்றி உளவறிய மாதுரி என்ற மாது ஒருத்தியை வேலைக்காரியாக கமலம்மாள் வீட்டுக்கு அனுப்புகிறான். நகை நாதன் சகோ தரர்களுக்குக் கிடைத்துவிட்டதென்று மாதுரி மூலம் அறிந்து அவர்களைத் தன் குகைக்குக் கொண்டுவரச் செய் கிறான். துப்பறிபவர்கள் குகையிலிருக்கும் கொள்ளைக் கூட்டத்தை மயங்க வைத்து போலீசுக்குத் தகவல் கொடுத்துவிட்டு தாங்களும் மயங்கி விழுந்துவிடுகிறார்கள். போலீஸ் வருவதற்குள் கொள்ளைக் கூட்டம் தப்பிவிடு கிறது. துப்பறிபவர்களைச் சந்தேகித்து போலீஸார் கைது செய்துகொண்டு போகிறார்கள்.

கமலம்மாள் வீட்டில் காணமற்போன வைரமாலை எதிர்பாராதவிதமாகக் கிடைத்து விடுகிறது. நாதன் சகோதரர்கள் கண்டுபிடித்ததாக வீட்டிலுள்ளவர்கள் வியப் புடன் களிப்படைகிறார்கள்.

நாதன் சகோதரர்களைப்பற்றி விசாரிக்க போலீசார் கமலம்மாள் வீட்டுக்கு வந்தபோது நாதனும் காதனும் நிரபராதிகள் என்றும் அதோடு அவர்கள் துப்பறியும் புலிகள் என்றும் அறிகிறார்கள். நாதன் சகோதரர்களின் ஏற்பாட்டின்படி கறுப்பு உருவத்தைக் கைதுசெய்து முக மூடியை விலக்குகிறார்கள்.

அந்தக் கருப்பு உருவம் யார்? நாதன் சகோதார் களுக்கு மேதாவிகள் என்ற பட்டம் வழங்கியது யார்? முடிவுகள் என்ன?

வெள்ளித் திரையில் காண்க.

1 ## மனோரமா

மாலைப் பொழுதிலின்ப சோலைதனிலே தென்றல்
வாசனை அள்ளி வீசுதே...மனந்தனிலே
ஆசை அலைகள் மோதுதே...மனந்தனிலே (மாலை)

கோலப் பறவைக் கூட்டம் கூடிப்பறந்து வந்து
கூண்டினில் சேரும் அந்திநேரம்...வண்ணஜாலம்
நீலக்குயிலும் இரை தேடிப் பண் பாடியே
நிலைபெறும் இன்பநேரமே...மனந்தனிலே (மாலை)

கொம்பில் பழம் கனிந்து குலுங்கும் நிலையைக் கண்டு
கொஞ்சியே வரும் கிள்ளைக் கூட்டம்
(கொண்டாட்டம்
அம்புவியிலும் அதைப்போல என் வாழ்வினில்
ஆவலும் நிறைவேறுமா...மனம் மகிழ
ஆசை நிறை வேறுமா (மாலை)

2 ## புல்-புல்

ஐயா வாங்க...இங்கே கொஞ்சம் வாங்க
உங்களைத்தான் மனசுக்குள்ளே நினைச்சுக்கிட்டிருந்
தேனுங்க (ஐயா)

பார்க்கவேணும் பார்க்கவேணும் என்று தனியே
பார்த்துபேச காத்திருந்தேன் நின்று இப்பொ
பார்த்தபலன் கைமேலேதான் பலித்துவிட்டதாலே-
நானே உமைத்தானே மறவேனே (இனி
இரண்டு மாடப் புறு போலிருப்போம் நாமே
உங்களைப் போல் அழகிலே
உண்டோ இந்த உலகிலே
சிங்கம் போல் நடையிலே

சிரிப்பு காட்டும் முகத்திலே
மங்கை நான் மோகம் கொண்டேன்
மன்மதனே உன அழகை
காணக்கண் கோடி வேண்டும்.

3 பட்டினத்தார்

நாடகம்:

1. ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்-செய்யவிரு
கைப்புறத்திலேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேனினி

2. முந்தித்தவங்கிடந்து முந்நூறு நாட் சுமந்து
அந்திபகலாச்சிவனை யாதரித்துத்-தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத்தழன் மூட்டுவேன் ?

3. வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோள்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து-முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன் ?

4. முன்னையிட்ட தீ முப்புரத்திலே!
பின்னையிட்ட தீ தென்னிலங்கையில் !!
அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே!!!
யானுமிட்ட தீ மூள்க மூள்கவே !!!!

5. வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ-சந்ததமும்
உன்னையே நோக்கி யுகந்து வரங்கிடந்து
என்னையே யீன்றெடுத்த தாய்.

6. வீற்றிருந்தாளன்னை வீதிதனிலிருந்தாள்
நேற்றிருந்தாள் இன்று வெந்து நீறுனாள்-பாற்றெளிக்க
எல்லீரும வாருங்கள் ஏதென நிரங்காமல்
எல்லாஞ் சிவமயமே யாம்.

4 ## புல்-புல்

ஒன்பது ரூபாய் நோட்டு ஓ ஐயா வாய்யா
உண்மையிலே ஒண்ணுமில்லே வெத்துவேட்டு
ஜம்பமாக போடுவது சூட்டு புஷ்கோட்டு
சமயம் வந்தால் அடிப்பது பிக்பாக்கெட்டு
தெம்புடனே என்றுமே பெரியோர்கள் பேச்சு
செல்வான் பரேசர் கார் ஓட்டி (ஒன்பது)

ஊரைச் சுற்றி வளைத்துலையில் போடுவான்
முதல் ஒண்ணுமில்லாமல் மோசம் பண்ணி
பொருள் தேடுவான்
பெரிய மனுஷன் போல வெளிச்சமும் போடுவான்
ப்ராடு செக்கு தந்தை இரவோடு ஓடிடுவான்
(ஒன்பது)

5 ## புல்-புல்

ஆசைக் கண்ணு அருகினில் வாடா
அன்பின சுவையே கனி அமுதே நீ வாடா
என் ஆருயிரே நீ இங்கே வாடா
இசைபாடும் குயிலே வான் மதியே வாடா
கண்ணின் மணியே கருவண்டே நீ வாடா
கலையே என் வாழ்வின் சுவையே நீ வாடா
(ஆசைக்)

கன்னித் தமிழ்தனிலே கதை சொல்ல வாடா
அன்னை என் துயர் தீர அன்பே வாடா
மண்ணின் மீதே மணிக்கொடியேந்தி வாடா
மகனே என் செல்வத் துரையே நீ வாடா
(ஆசைக்)

6 ## சீனியர்

உன்னழகைக் காண இரு கண்கள் போதாதே
(இரு கண்கள் போதாதே)
ஸமான ரஹித குணவதியுவதி அதிரூபவதி
உபாபதி வாக் பதி கமல ரமாபதி ஸுரபதி புகழும்
(ஸமான)

மாதரசே மயிலே மௌனமாகுமோ குயிலே
நீ தயவு புரிவாய் இனி நீ தயவு புரிவாய்
எந்தன் நேரிடையே வருவாயே ஆசை (மாத)

போறுளே பெண்ணழகி போறுளே
சீரான சங்கீதத்தை ஜோராக கேக்காமலே
சாப்பாவை வைப்பதற்குள் தாப்பாளைப்
போட்டுக்கிட்டு (போறுளே)

7 புல்-புல் கோஷ்டி

கண்ணாலே பேசுவோம் காதலை வீசுவோம்
பண்ணோடு இசைக் கூட்டியே
பாடுவோம்—கூடுவோம் ஆடுவோமே

விண்ணோங்க பேசுவோம்
வீணரை ஏசுவோம்

பெண்ணினத்தைப் போற்றவே வழி
காட்டுவோம் நிலை நாட்டுவோம்

கண்ணியமாய் வாழுவோம் ஒ...ஒ...ஒ...
கல்வியும் கலைஞானமும் நிறை
காவியம் பயிலுவோம் (கண்)

ஒ...ஒ...ஒ...

ஆணுடன் பெண்கள் யாவரும்
சமமென்றே துவோம்
அிலமே அன்பினல் அரசாளுவோம்
அயல் நாட்டிலுப் திறம் காட்டுவோம்
அழியாப் புகழ் தன்னை நாட்டுவோம்
அன்னையும் ஆ ஞனல் ஆனந்த மீருவோம்
அறிவோ டென்னாளுமே அழகாக வாழுவோம்
(ஆணுடன் பெண்கள் யாவரும்)

சாந்தி பிரஸ், சென்னை-1.

WRAPPER PRINTED AT SHANTI PRESS, MADRAS-1